# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.NO.342/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 01 (PW- 01) |
| பெயர் | :- | நாகமணி |
| தேதி | :- | 07-07-2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**01, 02-ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

என் மாமியார் பெயர் சின்னகண்ணு. பாப்பாயி அம்மாள் என்பவர் என் கணவரின் தந்தை வழி பாட்டி. பாப்பாயி அம்மாளின் கணவர் பெயர் சிந்தாமணி கவுண்டர். சிந்தமாணிக்கு செம்மண்ண கவுண்டர், சின்னதங்கம் ஆகிய இரு மகன்கள் என்றால் சரிதான். செம்மண்ண கவுண்டரின் மகன் -தான் என் கணவர். என் கணவரும் பெயரும் சிந்தாமணி. எங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகன், ஒரு மகள். இந்த வழக்கை தொடுத்தது என் கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

பாப்பாயி அம்மாளின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் நான் தாக்கல்செய்யவில்லை. என் கணவரின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல்செய்துள்ளோமா என்றால் இல்லை. என் கணவர் பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கைத் தொடுத்தார். புல எண் 20/2-இல் அடங்கிய 5.05 ஏக்கர், 21/1-இல் 1 ஏக்கர் நிலத்திற்கு என் கணவர் வழக்கிட்டார்.

இந்த வழக்கில் 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் அவர்கள் எதிர்வழக்குரையே தாக்கல்செய்யவில்லை. சொத்து சம்மந்தமான வில்லங்க சான்றிதழை எந்த ஆண்டுமுதல் தாக்கல்செய்துள்ளேன் என்றால் 1983-ஆம் ஆண்டிலிருந்து. பாப்பாயி அம்மாள் 1983-ஆம் ஆண்டிற்குமுன் இறக்க -வில்லை. அதன்பிறகுதான் இறந்தார். எந்த ஆண்டு எனக்குத் தெரிய -வில்லை. பாப்பாயி அம்மாளின் இறப்பு சான்றிதழை நான் இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.

பாப்பாயி அம்மாளுக்கு சொத்துக்கள் கிரயப்படி பாத்தியப்பட்டதா பட்டாப்படி பாத்தியப்பட்டதா என்றால் கிரயப்படியும் பட்டாப்படியும் பாத்தியப்பட்டது. கிரய ஆவண எண்ணோ அதன் ஆண்டோ எனக்குத் தெரியவில்லை. அந்த கிரயப்படி எத்தனை சென்ட் நிலம் பாத்தியப்பட்டது என்றால் 6 ஏக்கர் 5 சென்ட் வாங்கியுள்ளார். அந்த பத்திரத்தை பார்த் -திருக்கிறேன். எங்கள் வசம் இருக்கிறது. அந்த பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல்செய்துள்ளேன். பாப்பாயி அம்மாள் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பாப்பாயி அம்மாளுக்கு 6.5 ஏக்கர் சொந்தமானது நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

பாப்பாயி அம்மாள் கிரயம் வாங்கியது 3.20 ஏக்கர் மட்டும்தான் என்று சொன்னால் சரியல்ல. பாப்பாயி அம்மாள் பெயரில் உள்ள கிரயப் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல்செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் வேண்டுமென்றே அதை தாக்கல்செய்யவில்லை என்றால்

சரியல்ல. தற்போது உள்ள பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10-ஆம் பிரதிவாதி சந்திரா என் கணவரின் தங்கை. 04-ஆம் பிரதிவாதி ரத்தினசாமியின் அப்பா பெயர் மாணிக்கம் என்றால் சரிதான். அவருக்கும் வழக்குச் சொத்திற்கும் சம்மந்தமில்லை. அவர் கிரயம் வாங்கியதால் அவர் பெயர் பட்டாவில் உள்ளது. 1940-ஆம் ஆண்டில் இருந்து வில்லங்க சான்று தாக்கல்செய்தால் பாப்பாயி அம்மாளுக்கு எவ்வளவு கிரயம் வாங்கினார் என்றும் இரத்தினசாமி வகையறாவினர் எவ்வளவு கிரயம் வாங்கினர் என்றும் தெரியவந்துவிடும் என்பதால் அதை தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்து எங்களுக்கும் 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு மட்டும் சொந்தமானது என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகள் பாகப்பிரிவினைக்கு ஒப்புக் -கொண்டார்கள் என்றும் வரைபடம் தயாரித்துள்ளார் என்றும் நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

27.01.1956-ஆம் நாளன்றும் 06.02.1961-ஆம் நாளன்றும் பாப்பாயி அம்மாள் இரு கிரயப்பத்திரங்கள் மூலம் வாங்கிய சொத்துக்கள் மட்டும்தான் அவருக்கு சொந்தம் என்று சொன்னால் சரியல்ல. பட்டாவில் உள்ள எஞ்சிய நிலங்கள் மற்றவர்களுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. என் கணவர் 2018-ஆம் ஆண்டுதான் வில்லங்கம் எடுத்து பார்த்தார் என்றும் அப்போது -தான் விவரங்கள் தெரியவந்தது என்றும் நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

05.06.2002-ஆம் தேதியிட்ட கிரயப்பத்திரம் மூலம் 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகள் 03-ஆம் பிரதிவாதிக்கு விற்ற சொத்துக்கள் பாப்பாயி அம்மாளுக்கு சொந்தமானது இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்து 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு தனிபட்டா மூலம் கிடைத்த சொத்து என்று சொன்னால் சரியல்ல. பட்டாவின் தவறுதலாக அவர்கள் பெயர் ஏறிவிட்டது.

03-ஆம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் 13.09.2002-ஆம் தேதியன்று சேலம் கூட்டுறவு வீட்டுவரி சங்கத்தில் அடைமானம் வைத்து கடன் பெற்று வீடு கட்டியுள்ளனர் என்றால் வீடு எதுவும் இல்லை. கிரயப் பத்திரம் இருந்ததால் கடன் வாங்கினார்.

புல எண் 20-இல் இரத்தினசாமியின் தகப்பனார் மாணிக்கத்திற்கு 96 சென்ட் இடம் 24.02.1949-ஆம் தேதியிட்ட அறுதியாவணப்படி சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. 1/20 பங்குதான் சொந்தமானது. மேற்சொன்ன புல எண்ணில் அடங்கிய சொத்துக்கள் சம்மந்தமாக சிந்தாமணி அம்மாள், குள்ளம்மாள் ஆகியோர் மாணிக்கத்திற்கு 15.03.1961-ஆம் தேதியன்று விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் இல்லை. அந்த ஆவணம் 797/1961 ஆக ஓமலூர் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மொத்ததில் 96 சென்டிற்கு மாணிக்கம் உரிமையானவர் என்றால் சரியல்ல. அந்த 96 சென்ட் இரத்தினசாமி வகையறாவிற்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. அந்த 96 சென்டுதான் தற்போது புல எண் 20/2-இல் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்து பாப்பாயி அம்மாள் சொத்து. அந்த சொத்து

பாப்பாயி அம்மாளுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. அந்த சொத்து 02.03.2018-ஆம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் முதல் இன சொத்து என்றால் சரியல்ல.

இரத்தினசாமி புல எண் 20/1-இல் 1.05 ஏக்கர் நிலத்தை 23.02.2006-ஆம் தேதியன்று ஓமலூர் தொடக்க வேளாண்மை வங்கியில் செல்லு ரசீது எண் 959/2006 மூலம் அடைமானம் வைத்ததில் 91 செண்ட் நிலத்தை 02-ஆம் பிரதிவாதிக்கு 02.03.2018-ஆம் தேதியன்று விற்றுள்ளார் என்றால் சரியல்ல. இரத்தினசாமிக்கு சொந்தமான சொத்தைதான் 02-ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றும் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் அனுபோகமும் இல்லை என்றால் சரியல்ல.

05-ஆம் பிரதிவாதி வசந்தா ஓமலூர் சார்பதிவக ஆவண எண் 336/1986 மூலம் புல எண் 20-இல் 96 செண்ட் இடத்தை கிரயம் வாங்கி -யுள்ளார் என்றால் சரியல்ல. புல எண் 20தான் பின்னிட்டு 20/1, 20/2 என்று பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரிக்கப்பட்ட விவரம் எனக்குத் தெரியும் என்றும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்துமீது உண்மையை மறைத்து பொய் வழக்குத் தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

புல எண் 20-இல் மொத்தம் 6 ஏக்கர் 10 செண்ட் இருந்தது என்றால் சரியல்ல. மொத்தம் 7.10 ஏக்கர் இருந்தது. அதில் 2.89 ஏக்கர் நிலத்தை பெரியதம்பி கவுண்டர் 29.11.1938-ஆம் தேதியன்று கிரயம் வாங்கி -யிருந்தார் என்றால் சரியல்ல. அவர் யார் என்று தெரியவில்லை. 2.89 ஏக்கர் நிலத்தில் இருந்து 96 சென்டை அவருடைய தம்பி சின்னதம்பிக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார் என்றால் அவர்கள் யார் என்று

எனக்குத் தெரியவில்லை. அதிலிருந்து 96.25 சென்ட் நிலத்தை பெரியதம்பி -யின் வாரிசுகள் பொன்னியம்மாள் என்பவருக்கு 03.06.1969-ஆம் தேதியன்று விற்றுவிட்டனர் என்றால் அவர்கள் யார் என்று எனக்குத் தெரியவில்லை. பொன்னியம்மாள் அவர் இறக்கும்வரை அதை விற்காமல் அனுபோகம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. இரத்தினசாமியின் தாயார் பெயர் தெரியவில்லை. பொன்னியம்மாள் என்றால் எனக்குத் தெரியாது. பொன்னியம்மாள் இறந்தபிறகு இரத்தினசாமியும் அவரது வாரிசுகளும் அந்த சொத்தை 02-ஆம் பிரதிவாதி சக்திவேலுக்கு விற்றுவிட்டனர் என்றால் சரியல்ல. மீதி 96 சென்ட் இடம் பெரியதம்பியின் வாரிசுகளிடம் உள்ளது என்றால் சரியல்ல. அவர்கள்தான் விவசாயம் செய்துவருகின்றனர் என்றால் சரியல்ல.

புல எண் 20-இல் 3.20 ஏக்கர் நிலத்தை மட்டும்தான் பாப்பாயி அம்மாள் கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த 3.20 ஏக்கர் நிலத்தில் தான் நான் பாகம் கோர முடியும் என்றால் சரியல்ல. 20/1-இல் அடங்கிய 96 சென்டில் மட்டும்தான் பாகம் கோர முடியும் என்றால் சரியல்ல.

பட்டா எண் 126, 33 ஆகியவற்றில் அடங்கிய சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு சொந்தமானவை என்றால் சரியல்ல. சின்னதங்கத்தை ஊரில் சின்னதம்பி என்று அழைப்பார்கள் என்றால் சரியல்ல. இரு பெயரும் ஒருவர்தான் குறிக்கும் என்றும் எனக்கு தெரிந்திருந்தும் நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அவர்தான் முதல் பிரதிவாதியின் கணவரும் 02-ஆம் பிரதிவாதியின் தகப்பனாரும் என்றால் சின்னதங்கம்தான் அது.

வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தை எனது மாமனார் கொடுத்தார். பாப்பாயி அம்மாள் பெயரில் உள்ள விற்பனைப் பத்திரத்தை என் மாமனார்தான் எனக்கு கொடுத்தார். அந்த கிரயப்பத்திரத்தை இந்த வழக்கில் என்னால் தாக்கல்செய்ய முடியுமா என்றால் முடியும். நான் ஆவணங்களை வேண்டுமென்றே தாக்கல்செய்யாமல் மறைத்து வைத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையில் உண்மையான சங்கதிகள் எதையும் கூறவில்லை என்றால் சரியல்ல.

புல எண் 20-இல் மாணிக்கத்திற்கு 96 சென்டும் சின்னதம்பிக்கு 96 சென்டும் பெரியதம்பிக்கு 96 சென்டும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விவரங்கள் தெரிந்தும் அதை மறைத்து வழக்கு தாக்கல் -செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 05.06.2002-ஆம் தேதியிட்ட ஆவணத்தையும் 02.03.2018-ஆம் தேதியிட்ட ஆவணத்தையும் இரத்து செய்யுமாறு கோர எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் செல்லும் எங்களை கட்டுப்படுத்தும் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் 10-ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். 09.01.2016-ஆம் தேதியன்றே பட்டா எண் 126 கணினி மயமாக்கப்பட்டுவிட்டது என்றும் அதில் சின்னதங்கம், தங்கம்மாள், சக்திவேல், வசந்தா, கண்ணன் ஆகியோர் பெயர் மட்டும் உள்ளது என்றால் அது தவறாக ஏற்பட்டது. வழக்கு தாக்கல் செய்யவதற்குமுன் பட்டா மாறி இருந்து அதுச் சம்மந்தமாக இந்த வழக்கில் நிவாரணம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய கணவரின் தாத்தா சிந்தாமணிகவுணடரின் தகப்பனார் பெயர் பெரியதம்பி கவுண்டர் என்றால் எனக்குத் தெரியாது. பெரியதம்பிக்கு மாணிக்கம், சின்னதம்பி, சிந்தமாணிகவுண்டர், சுந்தரம் என்கிற 04 மகன்கள் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. அந்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

பாப்பாயி அம்மாளுக்கு சொந்தமான இடத்தில் எங்களுக்கும் 01, 02-ஆம் பிரதிவாதிகளுக்கும் வீடு உள்ளது என்றால் சரிதான். என் கணவரின் தாத்தா சிந்தாமணி இருக்கும்போதே சொத்துக்கள் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டன என்றும் அவரவர் தனிதனியாக சொத்தை அனுபோகம் செய்தனர் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டின் மின் இணைப்பு எண் 206 என்றால் சரிதான். 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளின் வீட்டின் மின் இணைப்பு எண் 205 என்றால் சரிதான். இருவருக்கும் பொதுவாக கிணறும் அதில் மின் இணைப்புடன் கூடிய Motor-ம் உள்ளது என்றால் சரிதான்.

வசந்தா ராஜாமணியிடம் வாங்கிய 96 சென்ட் நிலத்தையும் வசந்தாவின் குடும்பத்திற்கு பட்டாப்படி பாத்தியப்பட்ட மொத்த நிலத்தில் 45 சென்ட் நிலத்தையும் வசந்தா வகையறாவினர் 02-ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளனர் என்றால் அந்த சொத்திற்கும் வழக்குச் சொத்திற்கும் சம்மந்தமில்லை. நான் இரத்து செய்ய கோரும் ஆவணங்களில் உள்ள சொத்திற்கும் பாப்பாயி அம்மாளின் சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. பாப்பாயி அம்மாளின் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களில் பாகம் கோர எனக்கு உரிமையில்லை என்று

சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.